REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

தி. மு. க. பெற்றுள்ள வெற்றி

(9—3—57 நண்பகல்வரை)

★

சட்டசபை :	மக்கள் சபை :
5	1

(பெற்றுள்ள மொத்த வாக்குகள்)

சட்டசபை :	மக்கள் சபை :
4,89,776	1,21,606

மலர் 4] சென்னை : மாசி 26உ சனி (9—3—57) ★ ★ வெளியூர் : மாசி 27உ ஞாயிறு (10—3—57) [இதழ் 232

தேர்தலை நிறுத்துமாறு டெல்லிக்குத் தந்தி!

ஓட்டுப் பெட்டிகளின் 'இலட்சணம்' அம்பலம்!

'வித்தை' தெரிந்தவர் ஆளும்கட்சியினர்தானே?

எத்தனை தொகுதிகளில் 'கைவரிசை' காட்டப்பட்டது?

தேர்தல்கள் கேலிக்குரியதாக்கப்படும் வகையில், நடைபெறும் தேர்தலில் ஒழுங்கீனங்கள் மலிந்து கிடக்கின்றன.

'வித்தை' தெரிந்தவர்கள் எல்லாம் சுலபத்தில் பிறருடைய ஓட்டுக்களைத் திருடிக்கொள்ளும் வகையில், ஓட்டுப் பெட்டிகள் உடைக்கக்கூடியனவாக அமைந்திருக்கின்றன என்ற செய்தி ஆச்சரியத்திற்குரியதுதான்!

ஆளும் கட்சியான காங்கிரசுக்கு மட்டுமே இந்த ஓட்டுப் பெட்டிகளை சீல் பாழாகாமல் உடைத்து, திரும்பவும் மூடிவிடும் 'வித்தை' தெரிந்திருக்க நியாயம் உண்டு; ஏனெனில், ஓட்டுப் பெட்டிகள் தயாரிக்கப்படும் 'கம்பெனி'கூட சர்க்காரால் இரகசியமாக வைக்கப்பட்டிருப்பதாகும். பெட்டிகளைத் தயாரிப்பவர்களிடமிருந்து இந்த 'விதந்தை'யைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு காங்கிரசாருக்குத்தான் உண்டு!

இப்படிப் பலவழிகளிலும் தில்லுமுல்லுகளை—திருட்டுத்தனங்களைச் செய்ய ஆளும் கட்சியான காங்கிரசுக்கு வழியும் வசதியும் கிடைக்கிறது என்பதை மறுக்கமுடியாது.

பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா,' இதழில் வந்துள்ள செய்தி ஒன்று நடைபெறும் தேர்தலில் உபயோகிக்கப்படும் ஓட்டுப்பெட்டிகளின் இலட்சணம் பற்றிக் கூறுகிறது; அந்தச் செய்தியை அப்படியே கீழே தருகிறோம் :—

கல்கத்தா, மார்ச் 5—

மூடி, சீல் வைக்கப்பட்ட ஓட்டுப் பெட்டி ஒன்று எந்தவிதச் சிரமமும் இன்றி, சீல் பாழாகாமல் உடைத்து, பின், மூடிக் காட்டப்பட்டிருக்கிறது.

பிரதம மாகாண நீதிபதி ஒருவர், மற்றும் தேர்தல் அதிகாரிகள், அபேட்சகர்கள் முன்னிலையில் ஓட்டுப் பெட்டி உடைத்துக் காட்டப்பட்டபோது, அவர்கள் ஆச்சரியப்பட்டனர்.

'பார்வர்டு பிளாக்' கட்சி அபேட்சகர் ஒருவரின் ஏஜெண்டு, 'இப்படிச் செய்ய முடியும்' என்று கூறியபோது, அதனை நிரூபிக்குமாறு அதிகாரிகள் கோரினர்; உடனே அவர், எந்தவிதச் சிரமமும் இன்றி அதைச் செய்து காட்டினார்.

உடனே, ஓட்டுப் பெட்டிகள் தயாரித்துத் தந்த 'கம்பெனி' ஒன்றின் பிரதிநிதி வரவழைக்கப்பட்டார்; அவர் பெட்டியைப் பார்வையிட்டபின், பெட்டிகளில் உள்ள இந்தக் குறையை நிவர்த்திப்பதாக உறுதிமொழி கூறினர்.

மேற்கு வங்க கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் ஜோதி பாசு அவர்கள் பிரதம தேர்தல் அதிகாரியான சுகுமார் சென் அவர்களுக்கு இந்தச் சம்பவத்தைக் குறிப்பிட்டு, தேர்தல் நடைபெற்றுள்ள இடங்களில் எல்லாம் மறு தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும், திருப்திகரமான பெட்டிகள் வைக்கும்வரை தொடர்ந்து தேர்தல் நடைபெறுவதை நிறுத்த வேண்டும் என்றும்கோரி, தந்தி கொடுத்துள்ளார்.

சர்வாதிகார வெறியை எதிர்த்துக் கழகக் காவலர் நடத்திய கடும் போர்!

சனநாயகம் பிழைக்க சேலம் மக்கள் செலுத்திய பங்கு

ஒரு வீரம் செறிந்த வரலாறு!

'ஏக இந்தியா'க்கள் கைகோர்த்து ஆடிய கோமாளிக் கூத்து!

மிகக்குறுகிய மெஜாரிட்டியில் நெடுஞ்செழியன் தோல்வி

சென்னை, மார்ச் 9—

காங்கிரசின் சர்வாதிகார வெறியை எதிர்த்து நமது கழகக் காவலர்—பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் நடத்திய கடும் போராட்டம் சோக முடிவைப் பெற்றாலும், ஒரு வீர வரலாறாகும்!

காங்கிரசின் படை, பணபலம் முழுவதும் இந்தத் தேர்தலில் தி. மு. கழகத்திற்கு எதிராகவே திருப்பப்பட்டிருந்தது என்பதும், 'காங்கிரஸ் வெற்றி பெற்றாலும் பரவாயில்லை; இந்தத் தி. மு. கழகம் வெற்றி பெறக்கூடாது,' என்று கருதி, இதர 'ஏக இந்தியா'க்களும் காங்கிரசுடன் கைகோர்த்துக்கொண்டு, கழகத்தை. மூர்க்கத்தனமாக எதிர்த்தனர் என்பதும், குறிப்பாகக் கழக முன்னேடிகளின் தொகுதிகளில் இந்த 'ஏக இந்தியா'க்களின் பிணைப்பு இறுக்கமாயிருந்தது என்பதும் நாடறிந்த உண்மையாகும்!

இப்படி, எல்லா 'ஏக இந்தியா'க்களும் கூடிக்கொண்டு அடித்த கோமாளிக்கூத்து, நமது கழக காவலரான நெடுஞ்செழியன் அவர்களுக்குத் தேர்தலைப் பொறுத்த மட்டில் ஒரு சிறு தோல்வியைத் தந்திருந்தாலும், நமது தேர்தல் ஈடுபாடு—குறிப்பாக சேலம்போன்ற கழக முன்னணி வீரர்கள் போட்டியிடும் தொகுதிகளில் 'ஏக இந்தியா'க்களை—வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்குத் தமிழ் நாட்டில் சாய்காலாக நிற்கும் முற்போக்கு—பிற்போக்குக் கங்காணிகளை ஒரு அணியில் திரளுமாறு துரத்தி அவர்களது உண்மை உருவத்தை திரைநீக்கிக் காட்டி, மகத்தான வெற்றிபெற்று வருகிறது.

நமது பொதுச்செயலாளர் அவர்கள் சேலம் தொகுதி தேர்தலில் வெற்றி பெறாமற் போனதற்கான காரண விளக்கங்கள் நமக்கு இன்னும் கிடைக்கவில்லை.

ஆனால், பொதுச்செயலாளர் அவர்களை 207 வாக்குகளால் மட்டுமே 'ஏக இந்தியா'க்களின் கூட்டு அணியினால்—அவர்களது அதிகார பலம் பணபலம், படைபலம் இவற்றால்—அதுவும் எல்லாத் தொகுதிகளையும் போலவே இத்தொகுதியிலும் தில்லுமுல்லுகளையும் திருட்டுத்தனங்களையும் தாராளமாகச் செய்துதான் வெல்லமுடிந்திருக்கிறது.

அதனால்தான் பொதுச்செயலாளர் நடத்திய கடும் போராட்டம் நமக்கு ஒரு சோக முடிவைத் தந்திருந்தாலும், சர்வாதிகார - ஏகாதிபத்திய வெறிக்கு எதிராக நடத்திய ஒரு வீரம் செறிந்த போராட்ட வரலாறாகும் என்று கூறுகிறோம்.

நமது பொதுச்செயலாளர் அவர்கள் மொத்தம் பதிவான **55,132** வாக்குகளில் **24,713** வாக்குகள் பெற்றார்; காங்கிரஸ் அபேட்சகரான மாரியப்பன் அவர்கள் **24,920**—அதாவது, பொதுச்செயலாளரைவிட **207** வாக்குகள் மட்டும் அதிகம் பெற்றார்; சாமுவேல் என்ற கம்யூனிஸ்டு கட்சி அபேட்சகர் **5,487** வாக்குகள் மட்டும் பெற்று ஜாமீன் இழந்தார் என்பது தெரிந்ததே.

பிரிட்டிஷ் கொடியை ஏற்க தென்னாப்பிரிக்கா மறுப்பு

கேப்டவுன், மார்ச் 8—

தென் ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடியை உபயோகிப்பதைக் கைவிட்டு, தென் ஆப்பிரிக்க யூனியன் கொடியை மட்டும் சர்க்கார் சின்னமாக உபயோகிப்பதற்கான மசோதா ஆப்பிரிக்கப் பார்லிமெண்டில் இரண்டாம் முறையாகப் படிக்கப்பட்டு நிறைவேறியிருக்கிறது.

★

எங்கெங்கே செய்தனரோ?

இந்த 'வித்தை'யை எங்தேந்தக் காங்கிரசார், எங்கேங்கே, எப்படியெல்லாம் பயன்படுத்திக் கோண்டார்களோ, யாரறிவார்?

கார் விபத்தில் ஏ. கோவிந்தசாமி

சிறு காயங்களுடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

கடலூர், மார்ச் 9—

தென்னாற்காடு மாவட்டத் தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்களும், அவருடன் தோழர்கள் இராமமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, முத்துமல்லர் ஆகிய நால்வரும் நல்லூரிலிருந்து தேர்தல் அலுவல்களை முடித்துக்கொண்டு ஜீப் கார் ஒன்றில் திரும்பி வரும்போது, வளவனூர் தாலுகாவைச் சேர்ந்த தொழுதூர் எனுமிடத்திற்கு அருகில் ஒரு விபத்தில் சிக்கியிருக்கின்றனர். இவ்விபத்தின் விளைவாக தோழர் கோவிந்தசாமி அவர்களும் இராமமூர்த்தியும் இலேசான காயம்பட்டிருக்கின்றனர். மற்றிருவரும் காயம்எதும்படாமல் தப்பித்துக்கொண்டனர். டிரைவருக்கும் இலேசான காயம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு உளுந்தூர்பேட்டையில் முதல் சிகிச்சை தரப்பட்டது. பின்னர் தோழர் கோவிந்தசாமி அவர்களும், இராமமூர்த்தி] அவர்களும் கடலூர் சர்க்கார் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகின்றன.

நேற்று மாலை 6½ மணியளவில், இத்தகவல் சென்னைக்குக் கிடைத்ததும், உடனடியாக 'அறிவக'த்திலிருந்து இத்தகவல்கள் குறித்த முழு விவரங்களையும் தெரிந்துகொள்வதற்காக, கடலூர் சர்க்கார் மருத்துவமனைக்கு 'டிரங்க் டெலிபோன்' போடப்பட்டது. தோழர் கோவிந்தசாமி அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயப்படும்படியான அளவுக்குக் காயம் எதுவும் கிடையாதென்றும், எனவே இதுபற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்றும் மருத்துவமனை அதிகாரிகள் தகவல் தந்து உறுதி அளித்தனர்.

இன்னும் ஒரு வாரத்திற்குள் தோழர்கள் கோவிந்தசாமியும் மற்றவர்களும் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்படுவர் என்றும் அறிவித்தனர்.

ஏழைத் தொழிலாளி எம். எல். ஏ. ஆனார்!

ஆமதாபாத் துணி ஆலை ஒன்றில் பணியாற்றும் 25 வயதுள்ள தொழிலாளி ஒருவர் தேர்தலில் போட்டியிட்டு, தன்னை எதிர்த்து நின்ற காங்கிரஸ்காரரை தோல்வியுறச் செய்திருக்கிறார்.

மாதம் ரூ. 25 அடிப்படைச் சம்பளத்தில் 'அட்டெண்டர்' (சப்ராசி) ஆகப் பணியாற்றும் அவர், பம்பாய் மாநிலத் தொகுதி ஒன்றில் சுயேச்சை அபேட்சகராக நின்றார்; தேர்தல் பிரச்சாரத்திற்காக ஒரு மாதம் ரஜா எடுத்துக்கொண்டார்.

அத்தொழிலாளியை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகரும், மற்றும் மூன்று சுயேச்சை அபேட்சகர்களும் தோல்வியுற்றுவிட்டனர்.

அவருக்கு 12,268 வாக்குகளும், காங்கிரஸ் அபேட்சகருக்கு 10,906 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 9—3—57 சனி

வாழ்த்துகிறோம்!

ஆப்பிரிக் காவில் சகாரா பாலைவனத்தின் தென்மேற்குப் பகுதியில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்ததாக வரலாறு கூறும் ஒரு பெருமை மிக்க சாம்ராஜ்யத்தின் பெயரால், இன்று அந்த மடிந்த சாம்ராஜ்யத்தின் நினைவு கூறும் வண்ணம் 'கனா' என்ற பெயருடன் ஒரு சுதந்திரத் தாயகத்தை உருவாக்கியிருக்கின்றனர், அந்த அழிந்துபோன சாம்ராஜ்யத்தின் நிகழ்காலத் தலைமுறையினர்!

கடந்த மார்ச் திங்கள் 6-ந் தேதி விடுதலை பெற்று உதயமாகியுள்ள கனா என்ற இந்தப் புதிய நாடு, 'கோல்டு கோஸ்டு' என்றே அழைக்கப்பட்டு வருவதாகும். ஆனால் 'கோல்டு கோஸ்டு' என்பது, நாட்டின் ஒரு பகுதியின் பெயர்தான்; என்றாலும், வழக்கத்தின் காரணமாக அந்தப் பெயரே நாடு முழுமைக்கும் வழங்கலாயிற்று. கோல்டு கோஸ்டு, அஷாண்டி, வட மாகாணம் டோகோலந்து ஆகிய நான்கு பகுதிகள் சேர்ந்துதான், கனா என்ற பெயரில் சுதந்திர நாடாக முகிழ்த்துள்ளது.

நெடிய வரலாற்றையும், இயற்கையோடு வளர்ந்த பண்பாட்டையும் கொண்ட இந்த நாடு, இருநூறு ஆண்டுகளுக்குமேல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் காலனியாக இருந்துவந்திருக்கிறது. இந்த நாட்டின் நான்கு பகுதிகளும் வெள்ளையரிடம் பல்வேறு காலகட்டங்களில் அடிமைப்பட்டன.

இப்படி அடிமைப்பட்ட ஆப்பிரிக்க நாடு, இன்று சுதந்திரம் பெறுவது உலகில் உள்ள சகல விடுதலை விரும்பிகளுக்கும் மகிழ்ச்சியும் பெருமிதமும் தருவதாகும்.

இருண்ட கண்டம் என்றழைக்கப்படும் ஆப்பிரிக்காவில்தான், இன்று விடுதலைப்போராட்டக்கேந்திரம் இடம் பெற்றிருக்கிறது; இந்தக் கண்டத்தில்தான் அல்ஜீரியாவும் இருக்கிறது; இங்கு பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக நடைபெற்றுவரும் விடுதலைப் போராட்டம், உலகினையே கவலையில்—சஞ்சலத்தில் ஆழ்த்தும் சம்பவங்களை சிருஷ்டித்துக் கொண்டிருப்பதையும் காண்கிறோம்.

இந்த ஆப்பிரிக்காவில்தான் கென்யா என்ற நாடும், விடுதலை தாகம்கொண்டு வெள்ளை ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருப்பதையும் பார்க்கிறோம்.

இந்த ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவைதான் டுனீஷியாவும், மொராக்கோவும்! அண்மையில்தான், பிரெஞ்சு ஏகாதிபத்திய பிடிப்பிலிருந்து விடுதலை பெற்ற அந்த நாட்டு வீரவாலிபர்களில் எண்ணற்றோர் தங்கள் தாயகத்தின் விடுதலைக்காக மரணத்தை மனமகிழ்ச்சியோடு தழுவிக்கொண்ட காட்சிகள், நம்மைப்போன்று விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்போருக்கு என்றென்றைக்கும் நம்பிக்கையும், வீரமும் ஊட்டவல்ல பசுமையான ஆற்றல் கொண்டவையாகும்.

இந்த ஆப்பிரிக்காவில்தான் அல்ஜீரியாவும் இருக்கிறது; இங்குதான் விடுதலை விரும்பிகள் எத்தனை அநியாயமான விலை தந்தேனும் எத்தனை விலை மதிப்பில்லா இன்னுயிர்களைப் பிரெஞ்சு ஏகாதிபத்தியக் கொடியவர்களின் கொலைத் தொழிலுக்கு இரையாகத் தந்தேனும் விடுதலை பெற்றுவிடத் துடித்து நிற்பதையும், அடக்குமுறை வேகம் அதிகரிக்க அதிகரிக்க விடுதலைத் தாகமும் தீவிரமாகி போராட்டத்தை விரிவுபடுத்தி வருவதையும்நாம் காண்கிறோம்.

இப்படி, உலகின் விடுதலைப் போராட்டக் கேந்திரமாகியுள்ள ஆப்பிரிக்காவில் ஒரு நாடு விடுதலை பெறுவதானது மகத்தானதோர் சம்பவம் என்பது மட்டுமின்றி உலகம் முழுமையிலும் எங்கெங்கு அடக்கி ஒடுக்கப்பட்டவர்கள் — ஆதிக்கப் பிடிப்பில் சிக்கியவர்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் விடுதலை உணர்வைத் தீவிரப்படுத்தவும் போராட்டத்தைத் துரிதப்படுத்தவும் தூண்டுகோலாகவும் அமைவதாகும்.

எனவே, கனாவின் உதயம், ஆதிக்க புரியினர்க்கோர் பாடம்! விடுதலை விரும்பிகளுக்கோர் நம்பிக்கையூட்டும் நட்சத்திரம்!

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் பெருமையடித்துக் கொள்வதைப்போல சுதந்திர கனா, வெள்ளையரின் கருணை கடாட்சத்தால் பிறந்துவிட்ட குழந்தை அல்ல! போராடி உருவாக்கப்பட்ட நாடு!

இப்போது இந்த நாட்டின் பிரதமராக உள்ள டாக்டர் நக்ருமா தோற்றுவித்த 'கன்வென்ஷன் பீபிள்ஸ் பார்ட்டி' என்ற கட்சியும், அதன் தோற்றுவாயான 'ஐக்கிய கோல்டு கோஸ்டு கன்வென்ஷன்' என்ற தேசிய இயக்கமும் குறிப்பாக, 1947-ம் ஆண்டிற்குப் பிறகு கனாவின் உதயத்திற்காக நடத்திய போராட்டங்கள்—புரிந்துள்ள தியாகங்கள்—தந்துள்ள விலைகள் கொஞ்ச நஞ்சமல்ல!

மக்களின் சம்மதத்தைப் பெற்றுவிட்டவராக டாக்டர் நக்ருமா வளர்ந்து 'இனியும் நமது ஆதிக்கம் இங்கு நீடிக்க முடியாது' என்ற நிலைக்குப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் துரத்தப்பட்ட பின்புதான் வழக்கம்போல் பிரிட்டன், சிறுது சிறிதாக அரசியல் சீர்திருத்தம் என்ற பெயரில் கனா மக்களுக்கு உரிமைகளை வழங்கியது.

டாக்டர் நக்ருமாவும் அவர் தலைமையில் திரண்டெழுந்த மக்களும் நடத்திய வீரம் செறிந்த — தியாகத்தில் தோய்ந்த போராட்டங்கள் தான் இன்று, கனாவிற்குச் சுதந்திரத்தைத் தேடித் தந்துள்ளன; கனா மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் சகல அதிகாரங்களையும் இலண்டன் 'வெள்ளை மாளிகை'யிலிருந்து ஆக்ராவில் உள்ள மக்கள் சபை மண்டபத்திற்கு இடம் பெயர்த்தது!

நீண்டகாலமாக விடுதலைக்கு ஏங்கிக் கொண்டிருந்தாலும், குறுகிய காலத்தில் தங்கள் விடுதலை வேட்கையைத் தேவையான அளவு தீவிரம் காட்டி தலித்துக்கொண்ட கனா மக்கள், விடுதலை விரும்பிகளின் பாராட்டுதலுக்கும் நன் மதிப்பிற்கும் உரியவர்கள்!

வடநாட்டு ஏகாதிபத்தியப் பிடிப்பில் சிக்கி அவர்களது பாசிச வெறிக்கும் கீழ்த்தரமான சுரண்டல் நோக்கங்களுக்கும் இரையாகி, வஞ்சிக்கப்பட்டு வாடி வதங்கும் தென்னாட்டு மக்கள் இந்த ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போர்க்கொடி ஏந்தியுள்ள நேரத்தில், கனாவின் விடுதலைச் செய்தி கிடைத்திருப்பது இரட்டை மகிழ்ச்சிக்குரியதாகும்.

தென்னாட்டு மக்கள், தங்கள் விடுதலைப் போராட்டத்தினைத் தீவிரமாக்கிக் கொள்ளவும் தங்கள் உள்ளத்திற்கு மேலும் தியாக மெருகேற்றிக் கொள்ளவும் கனா பெற்ற சுதந்திரம் பயன்படட்டும்.

மேலும் ஆப்பிரிக்காவில் இன்னும் ஆதிக்கம் செலுத்த நினைக்கும் ஏகாதிபத்திய வெறியர்களுக்கு, கனா ஒரு பாடமாக அமைய வேண்டுமெனவும் விழைகிறோம்.

வாழ்க சுதந்திரம்!

மக்கள் வரிப் பணத்தில் கவர்னர்களின் கொள்ளை

8 பேருக்கு சுமார் ரூ. 41 இலட்சம் கொட்டிக் கொடுக்கப்படுகிறது

புதுடில்லி, மார்ச் 7—

இந்தியக் குடியரசுத் தலைவரால் அறிவிக்கப்பட்ட முடிவுப்படி, இந்திய யூனியனைச் சேர்ந்த எல்லா மாநிலக் கவர்னர்களையும்விட பம்பாய் மாநிலக் கவர்னருக்குத்தான் அதிகமான அளவில் சம்பளம் தரப்பட இருக்கிறது.

இம்முடிவுப்படி, பம்பாய் கவர்னருக்கு ஆடம்பரச் செலவுகள், ராஜ பவன அதிகாரிகள்—சிப்பந்திகள்—மற்றும் குடியிருப்புச் செலவுகள், சுற்றுப் பயணச் செலவுகள் போன்றவைகளுக்காக ரூ. 5 இலட்சமும், ராஜ பவனக் கட்டிடங்களைப் பழுது பார்த்தல், கண் காணித்தல் ஆகிய செலவுகளுக்காக ரூ. 6½ - இலட்சமும், அங்கு போடப்பட்டுள்ள மரச் சாமான்களைப் புதுப்பித்துக் கொள்வதற்கான செலவுக்காக ரூ. 1½ இலட்சமும், வேற்றிடங்களுக்குச் செல்ல இரயில்வேக்களில் தனிப் பெட்டிகளுக்கான செலவுக்காக ரூ. - 18,000-மும் கொடுக்கப்படுமாம்.

இதுபோலவே, மற்ற மாநில கவர்னர்களுக்குத் தரப்படும் தொகை பற்றிய விவரமும் தரப்பட்டிருக்கிறது; அது கீழே தரப்பட்டிருக்கிறது :—

பம்பாய் கவர்னர்	ரூ. 13,18,000
சென்னை கவர்னர்	ரூ. 7,53,000
மைசூர் கவர்னர்	ரூ. 4,95,000
ஆந்திரா கவர்னர்	ரூ. 4,46,000
பஞ்சாப் கவர்னர்	ரூ. 3,51,000
இராஜஸ்தான் கவர்னர்	ரூ. 3,28,000
கேரள கவர்னர்	ரூ. 3,07,000
மத்தியப் பிரதேச கவர்னர்	ரூ. 1,00,000

இந்த 8 மாநில கவர்னர்களுக்காக மட்டும் ஆண்டொன்றுக்கு ரூ. 40,98,000 இந்திய சர்க்கார் கொடுக்க இருக்கிறது என்பதும், பம்பாய் கவர்னருக்கு அடுத்தபடியாக சென்னை கவர்னர் அதிகமாகச் சம்பளம் பெறுவதும், பம்பாய் கவர்னராக இப்போது நியமிக்கப்பட்டிருப்பவர் முன்னாள் சென்னை கவர்னரான ஸ்ரீபிரகாசா ஆவார் என்பதும் கருதத்தக்கது.

செஞ்சீனத்திற்கு சியாங் இரகசியதூது?

அரசியல் நிபுணரொருவர் அனுப்பப்பட்டிருக்கிறாராம்

டோக்கியோ, மார்ச் 7—

தேசீய சீனத்தலைவரான சியாங் கே-ஷேக்கின் இரகசியத் தூதுவராக பார்மோசாவிலுள்ள சாங் சுன் என்ற ஒரு பிரசித்தி பெற்ற அரசியல் நிபுணர் ஒருவர் பீகிங் புறப்பட்டுள்ளார் என்று ஜப்பானியச் செய்தி இதழ் ஒன்று ஒரு செய்தி வெளியிட்டிருக்கிறதாம்.

'தேசீயச் சீனாவிற்கும் மக்கள் சீனாவிற்கும் இடையே சமாதான உடன்படிக்கைக்கான நல்ல வாய்ப்புகளை சாங்சுன் கண்டறிவார் என்று மக்கள் சீனாவிலுள்ள பீகிங்குக்குடனும் தேசீயச் சீனாவிலுள்ள தைப்பேயுடனும் தொடர்பு கொண்டுள்ள சில வட்டாரங்களிலிருந்து இத்தகவல் தரப்பட்டதாக அவ்விதழ் அறிவித்திருக்கிறதாம்.

வெள்ளை ஆதிபத்தியத்தின் நிறவெறித் தாண்டவம்

ஆப்பிரிக்க மக்களின் ஜீவாதார உரிமை சிதைக்கப்படும் கொடூரம்

சாலிஸ்பரி, மார்ச் 7—

'வாக்களிக்கும் உரிமை, நாகரீகப் பண்பும் கடமை உணர்ச்சியும் கொண்டவர்களுக்கு மட்டுமே அளிக்கப்படும்' என்ற ரொடீஷிய சர்க்காரின் கொள்கையை, ரொடீஷியக் கூட்டு சர்க்காரில் அங்கம் வகிக்கும் மற்ற நான்கு சர்க்காரின் தலைமைப் பீடங்களும் ஏற்றுக்கொண்டுள்ளதாக ரொடீஷியக் கூட்டு சர்க்காரின் சட்ட மந்திரி கூறியிருக்கிறார்.

ஆனால், இந்த மறைமுகமான நிறவெறிப் போக்கிற்கு எதிராக நியாசலந்திலுள்ள ஆப்பிரிக்கரான வெலிங்டன் சிர்வா என்பார் பலத்தக் கண்டனக் குரல் எழுப்பியிருக்கிறார்.

'நாகரீகப் பண்பும் கடமை உணர்ச்சியும் உடையவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை உண்டு' என்று கூறப்படுவதில் காணப்படும் 'நாகரீகப் பண்பு' என்ற சொல்லில் அடங்கியிருக்கும் உண்மையை—ரொடீஷிய சர்க்காரின் நிறபேத வெறியை அவர் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

'நாகரீகப் பண்பு' கொண்டோர் என்று கூறப்படுவோர் வெள்ளையராதலால், மற்ற ஆப்பிரிக்கர்கள் வாக்குரிமை அளிக்கப்படாமல் சாட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றனர் — துரோகமிழைக்கப்பட்டிருக்கின்றனர்' என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

"ஆப்பிரிக்கர்கள், சர்க்கார் துறையில் இடம் பெற்றுவிடக் கூடாது என்ற ஒரே கேடு நினைப்பின் காரணமாகவே இந்த 'இழிவான கொள்கை' வகுக்கப்பட்டிருக்கிறது" என்றும் அவர் மிகத் துணிந்துரைத்திருக்கிறார்!

வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை உண்டென நம்பின ஆப்பிரிக்கர்கள் இதை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்றும் அவர் கூறியதாகத் தெரிகிறது.

ஆனால், பெடரல் சர்க்காரின் பிரதம மந்திரியாக இருக்கும் சர். ராய் விலன்ஸ்கி நாகரீகப் பண்பாளரிடம் அதிகாரப் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டுமென்ற சர்க்காரின் கொள்கையை ஆதரிக்க முடியாது என்று மிகத் தெளிவாக வெலிங்டன் சிர்வா தமது கருத்தைத் தெரிவித்தது குறித்து மகிழ்ச்சியடைகிறாராம்!

கூட்டுச் சர்க்காரில் ஆப்பிரிக்கர்கள் அங்கம் வகிப்பதோ பங்கு பெறுவதோ கூடாது என்ற கருத்தில் ஐரோப்பியர்கள் இவ்வாறு செய்வதாக வெலிங்டன் சிர்வா கூறுவது வெட்கக் கேடானது என்றும் அவர் கூறினாராம்.

சுதந்திரம் பெற்ற ஆப்பிரிக்க நாடு

ஐ. நா. உறுப்பினராகிறது

ஐ. நா. சபையின் உறுப்பினராகக் கோரி மேற்கு ஆப்பிரிக்காவில் புதிதாகச் சுதந்திரம் பெற்றிருக்கும் கனா நாடு சமர்ப்பித்திருந்த மனுவை, பாதுகாப்புச் சபை ஏற்றுக்கொண்டுவிட்டதாம்.

கனா ஐ. நா. சபையில் 81-வது உறுப்பினர் நாடாக சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

சூயஸ் கால்வாயில் கப்பல் போக்குவரத்து

கெய்ரோ, மார்ச் 8—

சூயஸ் கால்வாயில் இன்று முதல் மீண்டும் கப்பல் போக்குவரத்து ஆரம்பமாகக்கூடும்.

500 டன் வரை எடையுள்ள கப்பல்களை சூயஸ் கால்வாய் வழியில் எகிப்து அனுமதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

சூயஸ் கால்வாயில் மார்ச் மாதக் கடைசியில் 30அடி அகலக் கப்பல்கள்போகும் அளவுக்குத் தடை நீங்குமென்று பிரிட்டன் எதிர்பார்க்கிறதாம்.

எவரெஸ்ட் சிகரம்

உலகில் உயரமானது அல்லவாம்!

உலகத்தில் மிகவும் உயரமான மலைச் சிகரம் எவரெஸ்ட் மலை அல்ல என்று அமெரிக்கப் பூகோள சங்கம் வெளியிட்டுள்ள புதிய உலகப் படம் காட்டுகிறதாம்!

உண்மையில் உலகத்தின் மிகவும் உயரமான மலை 'மானா கியா' என்று, ஹாவாய் தீவுக்கு அருகே கடலில் ஆழம் பார்த்த போது இது தெளிவாயிற்று என்றும் தெரிகிறது.

கடலுக்கு அடியிலுள்ள அடி மட்டத்திலிருந்து சிகரம்வரை அதன் அளவு 33,476 அடி என்றும், இது எவரெஸ்டைவிட 4,448 அடி உயரமாகும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளதாம்.

எனினும், 'மானா கியா' மலையின் சிகரம் கடல் மட்டத்துக்கு மேல் 13,796 அடி உயரம்தான் காணப்படுவதாகவும் தெரிகிறது.

முத்துக் குளித்தலில் 1,000 பேர் ஈடுபடுவர்

தூத்துக்குடியில் முத்துகுளிப்பது மார்ச் 15-ந்தேதி ஆரம்பமாகும் என்றும் 127 இலட்சம் முத்துச்சிப்பிகள் எடுக்கப்படும் என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

சுமார் 1,000 பேர் முத்துக் குளிப்பார்கள்: இவ்வேலைஇரண்டு மாத காலம் நடைபெறுமாம்.

பண்டிதரோ எட்டி உதைக்கிறார்; இவர்கள் தொட்டுக் கும்பிடுகின்றனர்

கம்யூனிஸ்டு ஆதரவு சங்கங்களில் மந்திரிகளும் அதிகாரிகளும் பங்கு பெறக்கூடாது

புதுடில்லி, மார்ச் 7—

நாட்டிலுள்ள கம்யூனிஸ்டுகளின் ஆதரவுபெற்ற கலாச்சார, சமுதாய அமைப்புகளுடைய நடவடிக்கைகளில் சர்க்கார் உயர்தர அதிகாரிகளும் மந்திரிகளும் கலந்து கொள்வதோ, ஆதரவு தருவதோ கூடாது என்று மத்திய சர்க்கார் தாக்கீது ஒன்றைப் பிறப்பித்து எல்லா மாநில சர்க்கார்களுக்கும் அனுப்பியுள்ளதாகத் தெரியவருகிறது.

இப்படிப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பும் அவைகளின் நடவடிக்கைகளுக்கு ஆதரவும் தருவது கூடாதென்றும், அவர்கள் அவ்வாறு கலந்துகொண்டால் அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு ஏதுவாகும் என்றும் காலாகாலத்தில் எச்சரிக்கப்பட்டுள்ளனர்; இப்போது, அவ்வாறு மந்திரிகளும் அதிகாரிகளும் கம்யூனிச ஆதரவு நிறுவனங்களுக்கும் அவைகளின் நடவடிக்கைகளுக்கும் ஆதரவு தருவது கூடாதெனத் தெரிவிக்குமாறு அந்தந்த மாநில முதலமைச்சர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனராம்.

இப்படிப்பட்ட ஒரு உத்தரவிற்கான காரணம், இந்த கம்யூனிச ஆதரவு நிறுவனங்கள், சூயஸ் பிரச்சினைக்குப் பிறகு மேற்கொண்டுள்ள 'அதி தீவிர' நடவடிக்கைகளே என்றும் கூறப்பட்டிருக்கிறது.

சூயஸ் பிரச்சினையை ஒட்டி எகிப்துமீது பிரிட்டன் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் நாட்டில், பிரிட்டன்மீது மக்களுக்கு ஏற்பட்டிருந்த ஒருவித வெறுப்பைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு 'ஆசியக் கூட்டு இயக்கம்' ஒன்றினை நிறுவியிருக்கின்றனர் என்றும், இதில் அடங்கியிருக்கும் விசேடமான உட்பொருளை புரிந்துகொள்ளாமல் சில உயர்தர அமைச்சர்கள்கூட, இவ்வகை நிறுவனங்களுக்குத் தங்கள் ஆதரவைத் தந்திருக்கின்றனர் என்றும் இந்தவகையான கம்யூனிச ஆதரவு தருவது மேலும் கூடாது என்பதற்காகவே அமைச்சர்களையும் அதிகாரிகளையும் எச்சரிப்பதில் மிகமிக அவசரமான நடவடிக்கைகளில் மத்திய சர்க்கார் ஈடுபட்டிருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

இதைப்போன்றே, சில அமெரிக்க ஆதரவு நிறுவனங்களுக்கும் சில உயர்தர அதிகாரிகள் ஆதரவு தருவதாகத் தெரியவந்துள்ளது என்றும், அப்படிப்பட்டவர்களையும் இந்திய சர்க்கார் எச்சரித்திருப்பதாகவும், என்றாலும் இந்த இருவகை நிறுவனங்களின் நடவடிக்கைகளையும் கணித்துப் பார்த்தால் கம்யூனிச ஆதரவு நிறுவனங்கள் பின்னேயதைவிட மிக அபாயகரமானவை—ஜனநாயக அமைப்புகளுக்குத் தீங்கு பயப்பவை என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்!

ஆதிபத்திய நோக்கமல்லவாம்!

"இதுவரை இருந்துவருவதைவிட இனிமேல் இலங்கைக்கும் மாலத் தீவுகளுக்கும் இடையே இருந்துவரும் உறவுமுறை மேலும் விரிவாக்கப்படும் என நான் நம்புகிறேன்" என்று கூறிய இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா அவர்கள் மேலும், 'மாலத் தீவுகளை இலங்கையுடன் சேர்த்துவிட வேண்டுமென நான் கூறுவதானது, இலங்கையின் காலனி ஆதிக்கத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்பதாகவோ, அல்லது அங்கு தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட இலங்கை முயற்சிப்பதாகவோ கொள்ளப்படக்கூடாது' என்றும் குறிப்பிட்டாராம்.

இந்த மாலத் தீவுகள் இப்போது பிரிட்டனின் பாதுகாப்பில் இருந்துவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைத் தமிழருக்கு பண்டா சர்க்கார் இழைக்கும் அநீதி

5 மாதத்தில் 5 இலட்சம் பேருக்கு குடியுரிமை மறுப்பு

இலங்கையில் வாழும் இந்தியர்கள் இலங்கைக் குடியுரிமை கோரித் தாக்கல் செய்திருந்த மனுக்கள் 1949 ஆகஸ்டு மாதத்திலிருந்து 1957 ஜனவரி இறுதி வரையில் முடிவு செய்யப்பட்டிருப்பது சம்பந்தமான புள்ளி விவரங்கள் கிடைத்திருக்கின்றன :—

இந்தக் காலத்தில் 15,880 மனுக்கள் அனுமதிக்கப்பட்டன; 1,55,848 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

இந்தியா, பாகிஸ்தான் குடியுரிமைப் பதிவுச் சட்டத்தின்கீழ் இதுவரையில் 58,003 பேர் இலங்கைக் குடிமக்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனர்; இவர்களில் பெண்களும் குழந்தைகளும் அடங்கியுள்ளனர். 5,04,306 பேருக்குக் குடியுரிமை நிராகரிக்கப்பட்டது.

1949 ஆகஸ்ட் மாதத்திலிருந்து மே மாதம் இறுதிவரையில் 11,000 மனுக்கள் அனுமதிக்கப்பட்டன; 87,344 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

மே மாதத்தில்தான், பண்டாரநாயகாவைத் தலைமையாகக் கொண்ட மகாஜன எக்சத் பெரமுனா கட்சி அதிகாரத்திற்கு வந்தது நினைவிற்குரியதாகும்; அதாவது 1,000 மனுக்களை அனுமதித்தால், 7442 மனுக்களை நிராகரிக்கிறார்கள்.

1956 ஜுன் மாதத்திற்கும் 1957 ஜனவரி இறுதிக்குமிடையே நிராகரிக்கப்பட்ட மனுக்களின் விகிதாசாரம் அதிகரித்துவிட்டது; இந்தக் காலத்தில், 3,942 மனுக்களே அனுமதிக்கப்பட்டன; ஆனால், 68,004 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன—அதாவது, 1,000 மனுக்களை ஏற்றுக்கொண்டால் 17,226 மனுக்களை நிராகரித்திருக்கின்றனர்.

முதலாவது திட்ட காலத்தில் இந்தியாவில் தேசியப் பாதைகளில் 30 பெரிய பாலங்களும், இதர பாதைகளில் 3 பெரிய பாலங்களும் மத்திய சர்க்காரால் கட்டப்பட்டன; இரண்டாவது திட்ட காலத்தில் மேலும் சுமார் 72 பெரிய பாலங்கள் கட்டப்படும்.

மக்கள் நம்பிக்கையை இழந்த சர்க்கார்

இராஜினாமா செய்யக் கோரிக்கை?

இந்தோனேஷிய சர்க்கார் நாட்டின் நம்பிக்கையை இழந்துவிட்டது என்றும், எனவே, இந்தோனேஷியப் பிரதமர் தமது மந்திரி சபையின் இராஜினாமாவைச் சமர்ப்பித்து ஆட்சிப் பொறுப்பை குடியரசுத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் இங்குள்ள ஒரு அரசியல் கட்சியினர் பிரதமர் டாக்டர் அலி சஸ்திரோமித் ஜோஜோவைக் கேட்டுக்கொண்டுள்ளனராம்.

சர்க்கார் தனது இராஜினாமாவைச் செய்யாவிட்டால் தனது பொறுப்பிலிருந்தேனும் அது விலகிக்கொள்ள வேண்டும் என்றும் அந்தக் கட்சி கோரியிருப்பதாகக் கூறப்படுகிறது.

அநேகமாகப் பிரதமர் தமது பதவியை இராஜினாமாச் செய்துவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், விரைவிலேயே தலைவர் சுகர்னோ, இந்தோனேஷியா முழுமையிலும் ஒழுங்குச் சட்டத்தைப் பிறப்பிக்கக்கூடும் என்றும் சில நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல் கிடைத்துள்ளதாம்.

உழைக்காமல் பெற்ற வருமானத்தின் மதிப்பு

திருமலை ஏழுமலையானின் பிப்ரவரி மாத வருமானம் பற்றி தகவல் தரப்பட்டிருக்கிறது.

ரூ. 2,01,687—3—0 இந்திய நாணயங்களும், ரூ. 1,446—2—0 ஐதராபாத் ஹாலி நாணயங்களும், ரூ. 510—11—6 தோலா எடை தங்கமும், ரூ. 9,435 தோலா எடை வெள்ளியும், ரூ. 1,173-க்கு பழைய ஜார்ஜ், இராணி, எட்வர்டு வெள்ளி ரூபாயும், 8 சவரன்களும், மற்றும் கைக்கடியாரங்களும் பேனாக்களும் புதிய துணிகளும் உண்டியலிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன.

தேர்தலில் ஆசிரியர்கள் ஈடுபாடு

சர்க்காரின் புதிய உத்தரவு

சென்னை, மார்ச் 7—

ஆசிரியர் வேலை பார்த்துக்கொண்டிருக்கும் ஒருவர் மாநில சட்ட (மேல்) சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், தமது ஆசிரியர் தொழிலைச் சரிவர கவனிக்க முடியாது என்று அந்தப் பள்ளியின் நிர்வாகம் கருதும்பட்சத்தில், அவரை, சட்டசபை உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக்கொள்ளவோ அல்லது ஒரு குறிப்பிட்ட குறுகிய காலம் வரையிலும் தமது சபை உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ளவோ கோருவதற்கு உரிமை உண்டென்று அரசாங்கம் ஒரு புதிய உத்தரவை வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்த உரிமையை குறிப்பிட்ட ஒரு பள்ளி நிர்வாகம் பயன்படுத்திக்கொள்ளாவிட்டாலும்கூட, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர் சட்டசபை உறுப்பினராக இருக்கும்போதுகூட ஆசிரியராகத் தொடர்ந்து கடமையாற்ற அனுமதிக்கலாம் என்றும் அந்த விதி கூறுகிறது.

இந்த விதி, மாநில சர்க்காரின் ஆசிரியர்களுக்கான சட்டத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறதாம்.

மாநில மேல் சட்டசபைகளுக்கு ஒதுக்கப்பட்ட ஆசிரியர் ஸ்தானங்களைத் தவிர மற்றெந்த இடங்களிலும் சட்டசபைகளுக்கோ அல்லது ஸ்தல ஸ்தாபன அமைப்புகளுக்கோ போட்டியிடுதல் கூடாதென ஏற்கனவே இவ்விதி மூலம் ஆசிரியர்கள் தடுக்கப்பட்டிருக்கின்றனர்.

சர்க்காரின் உதவி பெறும் பள்ளியில் சம்பளம் பெற்றோ பெறாமலோ—முழுநேரப் பணியாளராகவோ பகுதிநேரப் பணியாளராகவோ இருக்கும் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த ஒரு நபர், மேல் சட்டசபைக்கு ஆசிரியர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களைத் தவிர்த்த மற்ற சட்டசபைக்கோ அல்லது ஸ்தல ஸ்தாபனங்களுக்கோ அபேட்சகராகப் போட்டியிடவோ, தேர்தலில் தலையிடவோ, மற்றவர்களுக்காகத் தமது செல்வாக்கைப் பயன்படுத்தவோ, உதவுவதோ, வேறு ஏதாவது ஒரு அபேட்சகருக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுவதோ கூடாது என்றும், எந்த ஒரு தேர்தல் இயக்கத்திலும் நேரடி நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் கூடாதெனவும் வரையறுக்கப்பட்டிருக்கிறது.

வாக்களிக்கும் தமது உரிமையை நிச்சயமாக ஆசிரியர் பயன்படுத்தலாம்; ஆனால், தாம் இன்னின்ன முறையில்—அல்லது இன்னின்னாருக்கு வாக்களிக்கப் போவதாகவோ, வாக்களித்துவிட்டதாகவோ மற்றவர்களுக்கு எந்த வகையிலும் அறிவிக்கக்கூடாது என்றும் அவ்விதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அன்பளிப்புகள்

10—2—57 காலை 9 மணிக்கு, சென்னை - இராயப்பேட்டை மைலாப்பூரான் தெரு 4/5 எண்ணுள்ள இல்லில் தோழர் இரா. நாகநோணி—தோழியர் சகதாம்பாள் திருமணம் தோழர் மா. நம்பியார் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எ. வி. பி. ஆசைத்தம்பி, கோ. இளவரசு ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

3—2—57 காலை 9 மணிக்கு, புதுவைக் கடுத்த பெத்துசெட்டிப் பேட்டை மணமகன் இல்லில் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் தோழர் அருணசலம்—தோழியர் ர. இராசம் திருமணம் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தித் தோழர்கள் கந்தசாமி, ர. வையாபுரி, ப. கனகலிங்கம் ஆகியோர் பேசினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

1—2—57 அன்று காரைக்குடியில் தோழர் நா. பெத்த பெருமாள் — தோழியர் அலர்மேலு வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

தஞ்சை மாவட்டம் அண்டமி தோழர் எஸ். தங்கராசு—தோழியர் டி. சாரதாம்பாள் அவர்களது ஆண் மகவுக்கு 'பரிமளம்' எனப் பெயரிட்டதின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

தஞ்சை பூக்காரவீடு வாண்டையார் தெருவில், 'கே. வி. கே. சாமி படிப்பகம்' தோழர் பெ. கிருஷ்ணசாமி தலைமையில் தோழர் நாஞ்சில் கி. மனோகரன் அவர்களால் திறக்கப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

கண்பார்வை இழந்தவர்களுக்கு கண் தானம்!

நியூயார்க், மார்ச் 7—

கண்பார்வை இழந்தவர்களுக்கு மீண்டும் கண் பார்வை அளிக்க, அமெரிக்காவின் முன்னாள் குடியரசுத் தலைவரான ரூஸ்வெல்ட் அவர்களது துணைவியார் திருமதி எலினோர் ரூஸ்வெல்ட் தமது இரு கண்களையும், தாம் இறந்த பின் 'கண் பாங்கி' ஒன்றுக்குத் தந்துவிடுவதாக வாக்குறுதி தந்திருக்கிறாராம்.

இவரையும் சேர்த்து இதுவரை மொத்தம் 15,000 பேர் தங்கள் கண்களை 'தானம்' செய்துள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது.

தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு!

கைத்தறி நெசவாளர் காணிக்கை

சென்னை—பேசின்பிரிட்ஜ் நெசவாலையில் பணிபுரியும் கைத்தறி நெசவாளர் தோழர்கள் சார்பில் 12—3—57 அன்று தி. மு. கழகத் தேர்தல் நிதிக்குத்தென்று சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கையில் தமிழ் ஆட்சி மொழியாகும்?

திட்டக்குழு விரைவில் பரிசீலிக்குமாம்

கொழும்பு, மார்ச் 7—

இலங்கையில், தமிழ் மொழியை ஆட்சி மொழியாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று கோரி, இலங்கை மக்கள் ஐக்கிய முன்னணியினர், பிரதம மந்திரி பண்டாரநாயகாவிடம் மகஜர் ஒன்றை தந்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

தற்போது திட்டக் குழுவின் முன் இருக்கும் இம்மகஜர், விரைவில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிகிறது.

அந்த மகஜரில், இது தவிர மற்றும் பல விஷயங்கள் அடங்கியுள்ளன என்றும், மெள்ள மெள்ள இலங்கையில் ஒரு ஜனநாயக சோஷலிச சர்க்கார் அமைப்பதற்கான வழிமுறைகள் குறித்த சில திட்டங்கள் அடங்கியுள்ளன என்றும் தெரிகிறது.

இலங்கையிலுள்ள அயல்நாட்டு நிறுவனங்கள் தேசிய மயமாகும்?

சர்க்காரின் முடிவுகள் தேர்தல் பிரகடனத்தின் பிரதிபலிப்புதானாம்!

கொழும்பு, மார்ச் 7—

"இலங்கையில் அயல் நாட்டவரின் வசமிருக்கும் அமைப்புகளை தேசிய மயமாக்கவேண்டும் என்ற கொள்கை புதிதாகவோ, அவசரமாகவோ இப்போதுதான் செய்யப்பட்ட முடிவாகாது" என்று இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா கூறியிருக்கிறாராம்.

'வெளிநாடுகளுக்குச் சொந்தமான—அவைகளின் ஆதிக்கத்தின்கீழ் இருக்கும் அமைப்புகளை தேசிய மயமாக்குவதற்கு முன்பே இங்கு இன்னும் பல திட்டங்கள் தேசிய மயமாக்கப்பட வேண்டியிருக்கின்றன' என்றும் அவர் அறிவித்துள்ளதாகத் தெரிகிறது.

இலங்கையிலுள்ள சுதந்திரக் கட்சி அண்மையில் மேற்கொண்ட தீர்மானம் ஒன்றின்படி, இவ்வாறு விரைவில் அந்நிய நாட்டு நிறுவனங்களைத் தேசிய மயமாக்குவதில் இலங்கை சர்க்கார் தீவிர கவனம் செலுத்துகிறதா என்று கேட்கப்பட்டபோது அவர், 'கட்சியின் அந்தத் தீர்மானம் தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஒரு பிரதிபலிப்பாக அறிவிப்பே தவிர வேறல்ல' என்றும் கூறினாராம்.

வாகை சூடிய அண்ணா

வ. ஆ. மாவட்டத்தில் மின்னல்வேகச் சுற்றுப்பயணம்

கொட்டும் பனியிலும், நள்ளிரவிலும் மக்கள் கூடிநின்று வரவேற்று மகிழ்ந்தனர்

சென்னை, மார்ச் 8—

காஞ்சி தொகுதியில் கடந்த 4-ந் தேதியன்று தேர்தல் பணியினை முடித்துக்கொண்டு அண்ணா அவர்கள், அன்று மாலை 6-மணிக்கு, சென்னையில் சுமார் ஐந்து கூட்டங்களில் கலந்து கொண்டுவிட்டு, இரவு 2 மணிக்கு கரூர் சென்றார்; அங்கு பல தேர்தல் கூட்டங்களில் உரையாற்றிவிட்டு, மறுநாள் ஆத்தூர் தொகுதியில் போட்டியிடும் கழக அபேட்சகர் எம். பி. சுப்பிரமணியத்தை ஆதரித்துப் பல பகுதிகளில் சொற்பொழிவுகள் நிகழ்த்தி, அன்று இரவே நாமக்கல் நோக்கிச் சென்று மக்கள் சபைக்குப் போட்டியிடும் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களையும் தனித் தொகுதியில் போட்டியிடும் சுந்தர் ராஜ் அவர்களையும் ஆதரித்துப் பேசினார்; இன்று இரவு 7 மணிக்கு, வேலூர் வந்து சேர்ந்தார்.

வேலூர்:

வேலூர் நகரம் இன்று விழாக் கோலம் பூண்டிருந்தது. அண்ணா அவர்கள் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு முதன் முறையாக வேலூருக்கு வருவதை நகர மக்கள் மிகவும் உற்சாகமாக வரவேற்றனர்.

ஆங்காங்கு கழகக் கொடிகள், தோரணங்கள் மற்றும் இலட்சிய விளக்கங்களை தாங்கி நிற்கும் விளம்பர அட்டைகள் ஆகியவற்றால் நகரை அலங்கரித்து அண்ணாவின் வெற்றியைக் கொண்டாடினர். காஞ்சி கருவூலத்தின் வரவை எதிர்நோக்கியிருந்த கழகக்கடமை வீரர்கள் அவரைக் கண்டதும் விண்ணதிர முழக்கங்களை எழுப்பி நகரத்தின் பல பகுதிகளுக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

ஆங்காங்கு அண்ணா அவர்கள் சிற்றுரைகள் நிகழ்த்தி, கழகத்தின் சார்பில் வேலூர் சட்டசபைத் தொகுதியில் போட்டியிடும் தோழர் எம். பி. சாரதியை ஆதரிக்குமாறு வேண்டிக்கொண்டு இரவு 8 மணிக்கு ஆற்காடு நோக்கி விரைந்தார்.

ஆற்காட்டில்:

ஆற்காடு தொகுதியில் கழகத்தின் அபேட்சகராகப் போட்டியிடும் இலக்குமணன், அண்ணா அவர்களை வரவேற்று பொதுக் கூட்ட மேடைக்கு அழைத்துச் சென்றார். கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள், தாங்கள் ஆவலுடன் எதிர்நோக்கியிருந்த தலைவருக்குக் கைத்தறித் துண்டுகள், மலர்மாலைகள் அணிவித்து மகிழ்ந்தனர்.

ஆற்காடு நகர செயலாளர்கள், வியாபாரிகள், மேச்சேரி, காறை, வாலாஜா, கலவை, விளாப்பாக்கம், சக்கரமல்லூர், தீழ்விசாரம் முதலிய தி. மு. க. கிளைக் கழகங்கள் சார்பில் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பின்னர் அண்ணா அவர்கள் அரியதோர் கருத்துரையாற்றிவிட்டு, இரவு 11 மணிக்கு ஆம்பூர் சென்றார்.

ஆம்பூரில்:

ஆம்பூரில், அந்த நடுநிசியில் கூட முதியோர் 5,000 பேர் கூடியிருந்து ஆவலுடன் அண்ணாவை எதிர்நோக்கிக் காத்திருந்தனர்.

அங்கு அண்ணா அவர்கள், சட்டசபையில் எதிர்க்கட்சி ஒன்று இருக்கவேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தி, தி. மு. கழகத்தவர் மக்களின் உண்மையான பிரதிநிதிகளாக — ஏழைப் பங்காளர்களாக— மாதர் நலம்பேணும் நல்லவர்களாக — அக்கிரமத்தையும் அநீதியையும் விரட்டியடிக்கத் தக்க வீரர்களாகத் திகழ்வார்கள் என்று குறிப்பிட்டுவிட்டு, வரும் 11-ந்தேதி நடைபெற இருக்கும் தேர்தலில் தி. மு. க. அபேட்சகரான சம்பங்கியை ஆதரிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

பேரணம்பட்டு:

பின்னர், இரவு 1 மணிக்கு பேரணம்பட்டு சென்று அங்கு அவர்கள் அளித்த பாராட்டினையும் மலர் மாலைகள், கைத்தறித் துண்டு அன்பளிப்புகளையும் பெற்றுக்கொண்டு பேசுகையில் முஸ்லிம்களின் நலனைப் பாதுகாப்பதிலும் அவர்களின் குறைகளைக் கண்டறிந்து அவைகளைக் களைய கடமையுடன் செயலாற்றக்கூடியது தி. மு. கழகம் ஒன்றுதான் என்றும், இதுவரை கழகம் அவர்களிடம் கொண்ட அக்கரையை வேறு எவரும் கொண்டதில்லை என்பதே இதற்குப் போதிய சான்றாகும் என்றும் கூறி, தி. மு. கழக அபேட்சகருக்கே ஆதரவு தருமாறு முஸ்லிம் தோழர்களைக் கேட்டுக் கொண்டு இரவு 1-30 மணிக்கு குடியேற்றம் சென்றார்.

குடியேற்றம்:

குடியேற்றம் ஆற்றங்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் கொட்டும் பனியையும், குளிரையும் பொருட்படுத்தாமல் பல்லாயிரம் மக்கள் கூடியிருந்தனர். ஏராளமான தாய்மார்கள், மூதாட்டிகள் கூட்டத்தில் குழுமியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

அத்தொகுதியில் போட்டியிடும் கழக அபேட்சகர் சாம்பசிவம் அவர்கள் அண்ணாவை கண்டதும் களிப்புடன் வரவேற்றார்.

அண்ணா வந்ததும் அவரது வெற்றிக்குத் தங்கள் பாராட்டுதலைத் தெரிவிக்கும் வகையில் நீண்டதோர் கையொலி ஆரவாரம் செய்து மக்கள் தங்களின் அளவுகடந்த மகிழ்ச்சியினை எடுத்துக் காட்டினர்.

இறுதியில் அண்ணா அவர்கள், கழக அபேட்சகரை வெற்றியுறச் செய்யுமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டு சிறப்பான தோர் உரை நிகழ்த்தினார்.

(ந. - நி.)

அண்ணா வெற்றி: பாராட்டுகள்

★

சென்னை சட்டசபைக்கு, காஞ்சித் தொகுதியில் மகத்தான வெற்றிபெற்ற அண்ணா அவர்களைப் பாராட்டி ஏராளமான தந்திகளும் கடிதங்களும் காஞ்சியிலும், சென்னை 'அறிவக'த்திலும் வந்து குவிந்த வண்ணமிருக்கிறது.

இலங்கை, பர்மா உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்தும் மற்றும் பல வட இந்திய நகர்களிலிருந்தும் அண்ணா அவர்களது வெற்றிக்குப் பாராட்டுத் தெரிவித்து பல நண்பர்கள் வாழ்த்துச் செய்திகள் அனுப்புகின்றனர்.

தற்போது அண்ணா அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்; எனவே, அவர் வந்தபின் எல்லாவற்றையும் கண்ணுற்றுத் தன்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வார் என்று அறிவித்துக் கொள்கிறோம்.

—தலைமை நிலையம் தி. மு. க.

அண்ணா வெற்றியில் மாணவர் மகிழ்ச்சி!

அண்ணாமலை நகர், மார்ச் 8—

அண்ணா அவர்களின் வெற்றியைக் கேட்டவுடன், அண்ணாமலை பல்கலைக் கழக மாணவர்கள் நகரத்தின் முக்கிய பகுதிகளில் ஊர்வலமாகச் சென்று, விண்ணதிர ஒலி முழக்கங்கள் எழுப்பினர்.

சிறுவர்களுக்கு இனிப்புகள் வழங்கினர்.

அண்ணாமலை பல்கலைக் கழக மாணவர் செயலாளர் சோமசுந்தரம், ஊர்வலத்தின் இறுதியில், 'சனநாயகமும் எதிர்க்கட்சியின் அவசியமும்' பற்றி சிறிதுநேரம் பேசினார். (ந.-நி.)

மின்சாரத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

பாட்னா, மார்ச் 7—

பீகார் மின்சார விநியோக நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் பலர் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனரென்றும், எனினும், மின்சார விநியோகம் பாதிக்கப்படவில்லை என்றும் செய்திகள் கூறுகின்றன.

மொத்தமுள்ள 42 நிறுவனங்களில் 30-ல் வேலை நிறுத்தம் நடைபெறுகிறதாம்.

'சிந்தித்து செயலாற்றுக!'

வாக்காளர்களுக்கு அண்ணா வேண்டுகோள்

குடியேற்றத்தில் 8—3—57 இரவு நடைபெற்ற தி. மு. கழகத் தேர்தல் பொதுக்கூட்டமொன்றில், அண்ணா அவர்கள் கீழ் வருமாறு வேண்டுகோள் விடுத்தார்:—

"இந்த தேர்தல் தமிழகத்தில் மிகவும் முக்கியத்துவம் பெற்றதாகும். அந்த முக்கியத்துவத்தை மறந்து முடிவு செய்வது, தமிழகத்தின் வரும் ஐந்தாண்டு காலத்தையே தவறான பாதைக்கும், பயங்கரமான முடிவுக்கும், கூடாத போக்கிற்கும் திருப்பி விடுவதாகும்.

"யாருக்கு ஓட்டளிப்பது— என்பதே நீங்கள் சிந்திக்க வேண்டியதாகும். யார் சொன்னபடி நடப்பார்களோ, யார் உங்களை நம்பச் செய்து உங்களைக் கைவிடமாட்டார்களோ, யார் எதற்கும் அஞ்சாது, எதையும் எதிர்பாராது, என்ன கொடுத்தாலும் மயங்காமல், உறுதியுடன் உங்கள் நலனுக்குப் பாடுபடுவார்களோ அவர்களை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த மட்டில், இந்தத் தேர்தலில் ஈடுபடுவதின் காரணம் தமிழகத்தின் எதிர்காலமும், தூய சனநாயகமும், நல்ல ஆட்சியும் உருவாக்க வேண்டும்."

'நேர்மையான தேர்தல்' என்பது வெறும் பகட்டுத்தானா?

அதிகாரிகளுக்கு 'உதய சூரியன்' கிலி தருவதேன்?

தலைநகர் வாக்குப் பதிவில் ஒழுங்கீனங்கள் தலைவிரித்தாடின!

சென்னை, மார்ச் 8—

சென்னை நகரில் இன்று காலை பல தொகுதிகளிலும் வாக்குப் பதிவு துவங்கிற்று.

பல கட்சியினரும் தம் தம் ஆற்றலுக்கும் வசதிக்கும் ஒப்ப, நகரை, தங்கள் தங்கள் கொடிகளாலும், சின்னங்களாலும் அலங்கரித்திருந்தனர்.

கழக அபேட்சகர்கள் போட்டியிடும் தொகுதிகளில், வாக்குப் பதிவு சுறுசுறுப்பாகவே நடைபெற்றிருக்கின்றது. தோழர்கள் மிகுந்த உற்சாகத்தோடு வாக்குப் பதிவை நடத்தி வைத்திருக்கின்றனர்.

ஆனால், தேர்தலில் அனுபவமில்லாத நமது தோழர்களை ஏமாற்றுவதற்கும், வஞ்சிப்பதற்கும் ஆங்காங்கே முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன.

சில சாவடிகளில், நமது கழக அபேட்சகர்களுக்கு எதிரான வகையில், அதிகாரிகளே விஷமத்தனம் செய்திருக்கின்றனர். கழகத் தோழர்கள் வாக்காளருக்கு எழுதித் தரும் அடையாளச் சீட்டுகளை எடுத்துச் சென்றால், அந்த வாக்காளர்களை வேண்டுமென்றே தாமதப்படுத்துவது அல்லது ஏதாயினும் சாக்குக்கூறி திருப்பி அனுப்புவது என்பன போன்ற செயல்களில் வாக்குப் பதிவு நிலையங்களில் உள்ள அதிகாரிகள் நடந்துகொண்டிருக்கின்றனர்.

வண்ணாரப்பேட்டை சாவடி ஒன்றில், வாக்குப்பதிவு செய்ய வரிசையாக நின்றிருந்த மக்களின் முன்பாகவே வந்து, தங்களுக்கு ஓட்டுப் போட வேண்டும் என்று அங்கேயே பிரச்சாரம் செய்யத் துவங்கினர், மாட்டுப் பெட்டிக்காரர்களும் மற்றொரு 'அகில இந்திய'க் கட்சிக்காரரும்!

எழும்பூர் சாவடி ஒன்றில், நமது கழக அபேட்சகருடைய பெட்டியில் ஒட்டப்பட்டிருந்த சின்னத்தையே கிழித்து விட்டிருக்கின்றனர். பின்னர் நமது தோழர்கள் எழுப்பிய கூக்குரலுக்குப் பின பெட்டி சரிசெய்யப்பட்டிருக்கிறது.

ஆயிரம்விளக்குத் தொகுதி வாக்குப் பதிவுச்சாவடி ஒன்றில், நமது ஏஜெண்டுகள் உள்ளே அனுமதிக்கப்படுவதே பெரும் பாடாகிவிட்டது.

மற்றொரு சாவடியின் வாசலிலேயே, 'மாட்டுப் பெட்டிக்கு ஓட்டுப் போடுங்கள்' என்ற விளம்பரத்தாள்கள் ஒட்டப்பட்டிருந்தன.

பொதுவாக, நகரில் தேர்தலுக்கான ஏற்பாடுகள் ஒழுங்காக இருக்கவில்லை. போலீசாரில் சிலர், தெரிவிக்கிற குறைகளை அகற்றுவதற்குப் பதிலாக குறைகளை முறையிடுவோர் மீதே பாய்ந்தனர்!

பொதுவாக நேர்மையான தேர்தல் என்ற உறுதிமொழி பகட்டான எட்டுச்சுரைக்காய் என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்றே கூறவேண்டியிருக்கிறது.

ஆங்காங்கே தோழர்கள் தெரிவித்த குறைபாடுகள் எல்லாம் தேர்தல் அதிகாரிகளைப் பற்றியதாகவே இருந்தது.

'உதய சூரியன்' சின்னம் கொண்ட அடையாளச் சீட்டுக் கொண்டு சென்ற வாக்காளரை, நாற்பக்கணக்கில் வேண்டுமென்றே திருப்பி அனுப்பி அலைக்கழித்திருக்கின்றனர், பல சாவடிகளில்!

பின்னர் தோழர்கள், தாங்கள் வழங்கிவந்த அடையாளச் சீட்டுக்களிலிருந்த உதய சூரியன் சின்னத்தைக் கிழித்துவிட்டு சீட்டுக்களைத் தந்திருக்கின்றனர்.

ஒருவர், வாக்குப் பதிவு செய்ய குறைந்தது 5 நிமிடம் ஆகிறது என்பதால், வரிசையாக நிற்போர் நெடுநேரம் காத்திருக்க வேண்டியுள்ளது.

அதுவும் நகரங்களில், இப்போது அடையாளம் தெரிய என்று கூறி கையெழுத்தோ அல்லது பெருவிரல் குறி அடையாளமோ தரவேண்டும் என்று இருப்பது மேலும் காலதாமதத்திற்குக் காரணமாக அமைந்தது.

திருட்டு ஓட்டுப் பதிவுசெய்வதிலும், பணம் கொடுத்து ஓட்டு வாங்குவதிலும்தான் காங்கிரசார், தங்கள் முழு கவனத்தையும் ஆற்றலையும் செலவிட்டனர் என்பதை வாக்குப் பதிவு நடைபெறும் முறையைக் கண்காணித்தவர் கூறுகின்றனர்.

அடையாளச் சீட்டின் பின்புறத்தில் கையெழுத்துப் போடுவது அல்லது பெருவிரல் குறி அடையாளமிடுவது என்ற ஏற்பாட்டினால் வாக்குப் பதிவு செய்வதில் பெரும் காலதாமதம் ஏற்பட்டது.

வாக்குப் பதிவுச் சாவடிக்கு வந்தவர்களில் பலர், தங்களுடைய பெயர் வாக்காளர் பட்டியலில் இல்லாததால் ஏமாற்றமடைந்து திரும்பினர்; ஏராளமான தவறுகள் பட்டியலில் நிரம்பியிருந்தது; இவ்வளவு மோசமான பட்டியல் எப்பொழுதுமே இருந்ததில்லை என்பது, பொது மக்கள் புகார்செய்து கொண்டதிலிருந்து தெரியவருகிறது.

பட்டியலிலிருந்த பிழைகள் மட்டுமல்லாது, வாக்குப் பதிவுச் சாவடிகளைப் பாகுபாடு செய்து அறிவித்ததிலும் தவறுகள் ஏற்பட்டு வாக்காளர்கள் தவிக்கும் நிலை ஏற்பட்டது.

தடை உத்தரவு

சென்னை, மார்ச் 8—

தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளின் ஆதரவாளர்களிடையே மனக் கசப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருவதாலும் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்களை நடத்த உத்தேசித்திருப்பதாகத் தெரிய வருவதாலும் அதன் மூலம் பலாத்காரம் ஏதேனும் நடைபெறக் கூடுமென அஞ்சப்படுவதாலும் சென்னை நகர போலீஸ் சட்டம் 41-வது பிரிவின்கீழ் மார்ச் 8-ந் தேதியிலிருந்து 22-ந் தேதி வரையிலும் சென்னை நகர முழுமையிலும் ஊர்வலங்களுக்கும் பொதுக்கூட்டங்களுக்கும் போலீஸ் கமிஷனரால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.